05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# TEORI JIWA DALAM THIRUVASAGAM

**HAGALLYAH A/P SANTHIRAN**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**TESIS INI DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT UNTUK MEMPEROLEH IJAZAH SARJANA SASTERA (KESUSASTERAAN TAMIL) (MOD PENYELIDIKAN)**

**FAKULTI BAHASA DAN KOMUNIKASI**
**UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS**

**2017**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## ஆய்வுச் சாரம்

சிவபிரானை வழிபடும் சமயம் சைவமாகும். சைவ சமயத்தில் சாத்திர நூல்களும் மற்றும் தோத்திர நூல்களும் உள்ளன. அவை 14 சாத்திரங்கள் மற்றும் 12 சைவ தோத்திரங்கள் ஆகும். சைவ சமயத்தில் சாத்திர நூல்கள் தத்துவக் கருத்துக்களை விளக்க, தோத்திர நூல்கள் இறைவனைப் புகழ்ந்து பாடுகின்றன. பசு என்னும் சொல் உயிரைக் குறிக்கும். சைவ சமயத்தில் ஆத்மா, ஆன்மா, அணு, உயிர் ஆகியவற்றைக் குறிக்கப் பசு என்னும் சொல் பயன்படுகிறது. திருவாசகத்தில் உள்ள பாடல்கள் பசுக் கோட்பாட்டினை வெளிப்படுத்துகின்றனவா என்பதை ஆராய்வதே இந்த ஆய்வின் முதன்மை நோக்கமாகும். 'திருவாசகத்தில் பசுக் கோட்பாடு' என்ற தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வுக்குச் சைவ சமய 14 சாத்திரங்களுள் ஒன்றான 'திருவருட்பயன்' இந்த ஆய்வின் கோட்பாடாக அமைகின்றது. திருவருட்பயனில் மொத்தம் பத்து அதிகாரங்கள் உண்டு. அவற்றுள் உயிரவைநிலை எனப்படும் அதிகாரமே இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இந்த உயிரவைநிலை அதிகாரத்தில் பசு அதாவது உயிரின் பத்து இயல்புகளும் நூற்பாக்களுடன் விளக்கப்பட்டுள்ளன. இந்த நூற்பா விளக்கத்தைக் கொண்டுதான் இந்த பத்து இயல்புகளும் திருவாசகப் பாடல்களில் பேசப்படுகின்றனவா என்பதை இந்த ஆய்வில் கண்டறிந்து ஆராயப்பட்டுள்ளது. மேலும் திருவருட்பயன் உயிரவை நிலை அதிகாரமும் திருவாசகமும் பசுவின் 10 இயல்புகளை விளக்கும் விதத்தில் ஒற்றுமை வேற்றுமைகள் காண்கின்றனவா என்பதும் இந்த ஆய்வில் கண்டறிந்து ஆராயப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவில் திருவருட்பயன் கூறும் இந்தப் பசுவின் பத்து இயல்புகளும் திருவாசகப் பாடல்களிலும் இடம்பெற்றுள்ளன என்பதை இந்த ஆய்வின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது. தொடர்ந்து திருவருட்பயன் உயிரவை நிலை அதிகாரம் கூற வரும் பசுவின் இயல்பிற்கும் திருவசகம் கூற வரும் பசுவின் இயல்பிற்கும் ஒற்றுமை வேற்றுமைகள் உண்டு என்பதும் இந்த ஆய்வின் முடிவில் அறிந்து கொள்ள முடிகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**TEORI JIWA DALAM THIRUVASAGAM**

**ABSTRAK**

Kajian ini bertujuan untuk mengenal pasti konsep jiwa dalam lagu-lagu *Thiruvasagam*, membandingkan persamaan dan perbezaan konsep jiwa antara teks *Thiruvasagam* dan *Thiruvarudpayan* dan mengenal pasti konsep jiwa yang terbanyak dalam teks *Thiruvasagam* yang dinyanyikan oleh *Manikkavasagar* pada abad ke-8. Kajian ini berasaskan kualitatif dan data-data untuk kajian ini telah dikumpulkan melalui cara deskriptif dan analitik. Teori jiwa yang dibincangkan dalam teks *Thiruvarudpayan* digunakan dalam kajian ini. Dapatan kajian menunjukkan bahawa sebanyak 447 konsep jiwa terdapat dalam lagu *Thiruvasagam*. Sebanyak 9 konsep jiwa menunjukkan persamaan dan 1 konsep jiwa menunjukkan perbezaan dalam *Thiruvasagam*. Konsep *Uyir Muuvakaiyinar* iaitu sebanyak 149 paling banyak digunakan dalam teks Thiruvasagam. Implikasi kajian menunjukkan penggunaan konsep jiwa berasaskan *Thiruvarudpayan* dalam *Thiruvasagam* dapat memahami kebenaran jiwa dan mengertikan kewujudan jiwa di bawah naungan Tuhan.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**SOUL CONCEPT IN THIRUVASAGAM**

## ABSTRACT

The study aims to identify the soul concepts in *Thiruvasagam* hymns, compare the similarities and differences of the soul concepts between the texts of *Thiruvasagam* and *Thiruvarudpayan*, and identify the prevalent soul concepts found in the *Thiruvasagam* texts sung by *Manikkavasagar* in the 8th century. This study is based on qualitative analysis and the data for this study have been collected through descriptive and analytical methods. The soul theory put forward in the *Thiruvarudpayan* text is used for this study. The findings show that 447 soul concepts are found in the *Thiruvasagam* hymns. A total of 9 soul concepts show equality and 1 soul concept shows the difference in *Thiruvasagam*. The concept of the Soul being of three types occurs in 149 places in the *Thiruvasagam* text. The implications of the research showed that the soul concepts of *Thiruvarudpayan* found in *Thiruvasagam* can greatly enhance the understanding the reality of the soul within the realm of God.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **ஆய்வாளர் உறுதிமொழி** | ii |
| **நன்றியுரை** | iii |
| **ஆய்வுச் சுருக்கம்** | iv |
| **ABSTRAK** | v |
| **ABTRACT** | vi |
| **பொருளடக்கம்** | vii |
| **அட்டவணைப் பட்டியல்** | x |
| **வரைபடப் பட்டியல்** | xi |
| **சுருக்கக் குறியீட்டு விளக்கம்** | xii |
| **இயல் 1 அறிமுகம்** | |
| 1.1 முன்னுரை | 1 |
| 1.2 ஆய்வுப் பின்னணி | 9 |
| 1.3 ஆய்வின் சிக்கல் | 14 |
| 1.4 ஆய்வின் முக்கியத்துவம் | 15 |
| 1.5 ஆய்வின் நோக்கம் | 16 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



1.6 ஆய்வின் வினா 16

1.7 ஆய்வு எல்லை 17

1.8 ஆய்வு ஆதாரம் 18

1.9 ஆய்வின் முக்கியச் சொற்களின் விளக்கம் 18

1.10 முடிவுரை 26

**இயல் 2 முந்தைய ஆய்வுகள்**

2.1 முன்னுரை 27

2.2 ஆய்வு நூல்கள் 28

2.3 ஆய்வுக் கட்டுரைகள் 41

2.4 உள்நாட்டு ஆய்வு 43

2.5 வெளிநாட்டு ஆய்வு 44

2.6 முடிவுரை 54


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**இயல் 3 ஆய்வு நெறிமுறை**

3.1 முன்னுரை 55

3.2 ஆய்வின் வடிவமைப்பு 56

3.3 ஆய்வு அணுகுமுறை 58

3.4 ஆய்வுக் கட்டமைப்பு 59

3.5 தரவுச் சேகரிப்பு முறை 61

3.6 தரவுப் பகுப்பாய்வு முறை 62

3.7 ஆய்வுக் கோட்பாடு 62

3.8 ஆய்வு நடைமுறை 74

3.9 முடிவுரை 75


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**இயல் 4 பகுப்பாய்வு மற்றும் கண்டுபிடிப்புகள்**

4.1 முன்னுரை 76

4.2 பகுப்பாய்வு 77

4.3 முடிவுரை 246

**இயல் 5 முடிவுரை**

5.1 முன்னுரை 247

5.2 கண்டுபிடிப்பு 248

5.3 ஆய்வு முடிவு 251

5.4 ஆய்வுப் பரிந்துரைகள் 264

5.5 இந்த ஆய்வில் கிடைக்கப்பெற்ற இதர கருத்துக்கள் 266

5.6 முடிவுரை 267

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**மேற்கோள் நூல்கள்** 269

**பின்னிணைப்பு** 274

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**அட்டவணைப் பட்டியல்**

**அட்டவணை எண்** **பக்கம்**

3.1 உயிரவை நிலை பத்து இயல்புகளின் நூற்பா விளக்கம் 70

4.1 திருவருட்பயன் காட்டும் பசுவின் இயல்புக்கும் திருவாசகம் காட்டும் பசுவின் இயல்புக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் 235

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**வரைபட பட்டியல்**


| வரைபட எண் | பக்கம் |
|---|---|
| 3.1 ஆய்வு வடிவமைப்பு | 69 |
| 3.2 ஆய்வுக் கோட்பாட்டுக் கட்டமைப்பு | 59 |
| 3.3 ஆய்வு நடைமுறை | 56 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**சுருக்கக் குறியீட்டு விளக்கம்**

| | | |
|---|---|---|
| பி.அ | - | பின்னிணைப்பு அட்டவணை |
| திருவருட் | - | திருவருட்பயன் |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இயல் 1

## அறிமுகம்

### 1.1 முன்னுரை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சைவசித்தாந்தம் தமிழகத்தில் தோன்றிய ஒரு தத்துவப் பிரிவு ஆகும். சைவசித்தாந்தம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயநெறி ஆகும். சைவ சமயத்துக்கு இத்தத்துவ நெறி அடிப்படையாக விளங்குகிறது. “சைவசித்தாந்தம் என்பது சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடுகிற தன்மையை உணர்த்துவதாகும். இத்தன்மை கி.மு. 3000 ஆண்டிற்கு முன் சிந்துவெளி நாகரிகத்திலே தொடங்கியதாக இருக்கும். இதில் உருவவழி அருவ வழிபாடு என்பன காணப்படுகின்றன. தமிழ் மக்கள் வளர்த்தெடுத்து வருவது சித்தாந்தமாகும். இது சைவ சமயத்தவர்கள் கைக்கொள்ளும் போது சைவசித்தாந்தம் எனப் பெயர் பெறுகிறது” (மயில்வாகனம், 1998: 3). இவ்வாறு கூறுவதிலிருந்து சைவசமயத்தின் தொன்மையை அறிய முடிகின்றது. மேலும் சைவசமயத்தோடு தமிழ் மக்கள் கொண்டுள்ள பழம் பெரும் உறவை அறிந்து கொள்ள முடிகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சைவம், சிவம் ஆகிய சொற்களின் பொருளை அறிய முற்படும் போது, "சைவம் என்ற சொல் 'சிவம்' என்ற செந்தமிழ்ச் சொல்லினடியாய்ப் பிறந்து சிவனோடு தொடர்புடமை என்னும் பொருளில் வழங்குவது. சிவனைப் பற்றிய நிலையையும், சைவ நூல்களையும், சிவனடி சேர்தற்குரிய நெறியையும் அச்சொல் குறிக்கும்" (அறிவுடைநம்பி, 1992: 149) என்றும், சிவம் என்னும் சொல் செம்மை என்னும் பண்பினடியாய்ப் பிறந்தது. அஃது மங்கலம், இன்பம், தூய்மை, நன்மை என்னும் பல பொருளைத் தரும்" என்றும் அறிஞர் கூறுவதிலிருந்து இச்சொற்களுக்கான பொருளை அறிய முடிகின்றது (செந்தமிழ்ச் செல்வி, 1992 : 61). "சைவம் என்பது சிவ வழிபாடு" (கலைவாணி, 1998: 2). சுருக்கமாகக் கூறினால் சைவத்தின்பால் செல்பவர்கள் சிவத்தின்பால் செல்பவர்களாகக் கருதப்படுகின்றார்கள். சைவம், சிவம் என்ற சொல்லுக்கு எந்த ஒரு கருத்து வேறுபாடும் கிடையாது என்பதை இதன் வழி நன்கு அறிந்து கொள்ளலாம்.

05-4506 bupsi

"சித்தாந்தம் என்பது சித்து + அந்தம் என்ற இரு சொற்களின் கூட்டு ஆகும். இச்சொல், முடிபின் முடிபு என்று பொருள் தரும். சைவ சமயத்தின் முடிந்த முடிபைக் கூறும் நூல்கள் சைவசித்தாந்த நூல்கள் எனப்படும்" (சுப்பிரமணியபிள்ளை, 1927: 5). "சித்தம் என்றால் துணிபு; அந்தம் என்றால் முடிபு என்பது சித்தியார் தரும் விளக்கமாதலால், சித்தாந்தத்தின் துணிபாகிய முடிந்த முடிபு சைவசித்தாந்தம் ஆயிற்று" (கலைவாணி, 1998: 19). இவ்வாறு சைவம் என்ற சொல் சிவனோடு தொடர்புடைமையையும், சித்தாந்தம் என்ற சொல் முடிந்த முடிபு என்ற பொருளில் வழங்கப்படுவதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


திருமூலர் தம்முடைய திருமந்திரம் என்ற நூலில் 'சித்தாந்தத்தே சிவன் முத்தி சித்திக்கும்', 'தற்சிவம் கண்டோர் சைவ சித்தாந்தரே', 'சித்தாந்த வேதாந்தம் காட்டும் சிவனையே' என்று சைவசித்தாந்தத்தின் இயல்பினை உணர்த்தியுள்ளார். "தமிழ் அறிஞர்கள் மட்டுமல்லாது மேலை நாட்டினரான ஜி.யு.போப் சைவ சித்தாந்தம் திராவிட அறிவின் சிறந்த வெளிப்பாடு" (முருகவேள், 1984: 3-4) என்று ஜி.யு.போப் கூறியுள்ளமையின் வழி சைவசித்தாந்தத்தின் தன்மையைப் பன்னாட்டு அறிஞர்களும் அறிந்துள்ளமையை உணர முடிகின்றது. இத்தகைய சைவசித்தாந்தச் செந்நெறியின் தன்மைகளைக், கொள்கைகளைத் தமிழர் சித்தாந்த நூல்களில் பதிவு செய்துள்ளனர். சைவசித்தாந்த நூல்கள் சைவ சமயச் சான்றோர்களுக்கு உறுதுணையாக உள்ளன.

சைவ சமயம் தொடர்பான தத்துவக் கருத்துக்களை வழங்குவன சித்தாந்த சாத்திரங்கள் ஆகும். சித்தாந்த சாத்திரங்கள் தோன்றிய காலங்களும் அதற்கான காரணங்களும் 'சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி' என்ற புத்தகத்தில் தெளிவாகப் விளக்கப்பட்டுள்ளது. "காலக் கணிப்பின்படி இம்மெய்கண்ட சாத்திரங்கள் கி.பி. 12ஆம், 14ஆம் நூற்றாண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தால் ஆனது. இக்காலப் பகுதியை வரைந்து கொண்டு இவையெழுந்ததற்கான காரணங்கள் குறித்தாராயும் ஆய்வியலாளர் சிலர், 372 பின்வரும் காரணங்களை முன்வைக்கின்றனர்: இக்காலப் பகுதிக்குரிய (சிவபாத சேகரன் எனச் சிறப்பிக்கப்பெற்ற) முதலாம் இராஜராஜன் முதல் முதலாங் குலோத்துங்கன் வரையிலான சோழ மன்னர்கள் சைவத்தை இராஜாங்க மதமாகக் கொண்டு பேணியமையாலான சைவ பக்திக் கூர்ப்பு மிகுதி ஒன்று, சைவத் திருமுறைகளால் விளைந்த மெய்ஞ்ஞான உள்ளுணர்வுந்துதல் ஒன்று, அக்காலம் சமய ரீதியான வாதப் பிரதிவாதங்கள் மலிந்திருந்தமை ஒன்று, அபேத, பேதாபேத,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பேதவாதிகளாகிய சங்கர, ராமாநாஜ, மத்வ பரம்பரையினரின் பிரசாரங்கள் தென்னாட்டில் அதிகரித்திருந்தமை ஒன்று என்பன அவை. இவற்றுள் இரண்டாவது தவிர்த்து ஏனைய மூன்றும் அதற்கான பொதுக் காரணமும், இரண்டாவதும், நாம் மேலே அவதானித்தவையுங் கூட அதற்கான சிறப்புக் காரணமும் ஆம்" (கந்தையா, 1998: 185). இதன் வழி சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கும் தோன்றிய காலமும் அது தோன்றுவதற்கான காரணமும் தெளிவாக அறிந்து கொள்ளமுடிகின்றது.

"அந்த வகையில் சைவசித்தாந்த தத்துவக் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துக்கூறும் மெய்கண்ட சாத்திரங்கள் 14 என்பது,

உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று.

05-4506832 ptbupsi

என்ற பாடலிற் கூறப்பட்டுள்ளது. அவை,

1. திருவருட்பயன் - உமாபதி சிவாச்சாரியார்
2. உண்மை விளக்கம் - திருவதிகை மனவாசங் கடந்தார்
3. சிவப்பிரகாசம் - உமாபதி சிவாச்சாரியார்
4. சிவஞானசித்தியார் - அருணந்தி சிவாச்சாரியார்
5. சிவஞானபோதம் - மெய்கண்ட தேவர்
6. திருவுந்தியார் - திருவியலூர் உய்யவந்த தேவனார்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


7. திருக்களிற்றுப்படி பாடியார் - தென்கடவூர் உய்ய வந்த தேவனார்
8. இருபா இருபஃது - அருணந்தி சிவாச்சாரியார்
9. வினா வெண்பா - உமாபதி சிவாச்சாரியார்
10. போற்றிப் பஃறோடை - உமாபதி சிவாச்சாரியார்
11. கொடிக்கவி - உமாபதி சிவாச்சாரியார்
12. நெஞ்சுவிடு தூது - உமாபதி சிவாச்சாரியார்
13. உண்மைநெறி விளக்கம் - உமாபதி சிவாச்சாரியார்
14. சங்கற்ப நிராகரணம் - உமாபதி சிவாச்சாரியார்

போன்றவையாகும் (கிருஷ்ணவேணி, 2008: 51-52). இவை முறையே பதினான்கு சாத்திரங்களாகக் கருதப்படுகின்றன. "சைவ சாத்திரம் பதினான்கு என்று வழங்கும் வழக்கம் மதுரை நாயகம் பிள்ளை காலத்திலிருந்துதான் ஏற்பட்டிருக்க வேண்டும் என்று கொள்ள இடமுண்டு" (கோமதி, 1994: 66) என்று கூறுவதிலிருந்து சாத்திரம் பதினான்கு என்று வகைப்படுத்திக் கூறியதை அறிய முடிகிறது.

05-4506 bupsi

சைவசித்தாந்த சாத்திர நூல்கள் பதி, பசு, பாசம் ஆகிய மூன்றின் இயல்புகளை உணர்த்துகின்றன. "பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களையும் உள்ள பொருள்களென நிலைநாட்டி, அவற்றின் இயல்புகளை விளக்குவதே சற்காரிய வாதம். இதுவே சைவசித்தாந்தம் என்றும் அழைக்கப்படும்" (கந்தசாமி, 1978: 117) என்று கூறுவதிலிருந்து சைவசித்தாந்தம் முப்பொருளும் நிலைத்த இயல்பினை உடையது என்று கூறுவதை அறிய முடிகின்றது. "பதி எனப்படுவன இறைவன்; பசுக்கள் எனப்படுவன உயிர்கள்; பாசம் எனப்படுவது, உயிர்களைக் கட்டும் தளை" (வைத்தியநாதன், 1992: 9) என்று அறிஞர்கள் விளக்கம் தருகின்றனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பதியைப் பற்றி விளக்கும் போது "அனைத்துலகுக்கும் உயிர்களுக்கும் தனி முதல்வனாயிருப்பவன் எவனோ, அவனே பதியாம்" (கந்தசாமி, 1978: 117). பசுவைப் பற்றிக் கூறும் போது "ஆன்மா பாசத்தாற் கட்டுண்டிருப்பதால் அது பசு என்று கூறப்படுகிறது" (மயில்வாகனம், 2000: 172). பாசம் என்பதை விளக்கும் போது "தளை என்பது உயிரின் வியாபகத்தைக் கட்டுப்படுத்தி உயிரைப் பிறப்பு இறப்புக்கு உட்படுத்துவது" (இரவி, 2004: 136). சுருங்கக் கூறின் " பதி என்றால் இறைவன் அல்லது சிவம், பசு என்றால் உயிர்கள் அல்லது ஆன்மாக்கள், பாசம் என்றால் மும்மலங்கள் எனவும் கொள்ளப்படும்" (கலைவாணி, 1998: 20). இவ்வாறு பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் தத்துவத்தை, சைவசித்தாந்த சாத்திரங்களின் வழி அறிந்து கொள்ளலாம்.

சைவ சமயத்தில் சாத்திர நூல்கள் தத்துவக் கருத்துக்களை விளக்க, தோத்திர நூல்கள் இறை இயல்பைப் பாடுகின்றன. சைவ சமய இலக்கியமான பன்னிரு திருமுறைகளுள் முதல் நான்கு திருமுறைகளைப் பாடியவர்கள் முறையே திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மற்றும் மாணிக்கவாசகர் ஆவர். இவர்களுள் ஒருவரான "மாணிக்கவாசகருடைய வரலாறு இரண்டு பெரும் பிரிவுகளில் கருதப்பெறலாம். ஒன்று : அருள்நெறி வாழ்க்கை. மற்றொன்று : உலக நெறி வாழ்க்கை. முன்னையதைத் தெரிந்து கொள்ளுவதற்கு மாணிக்கவாசகரே தெளிவான குறிப்புகளைக் கொடுத்துள்ளார்; அக்குறிப்புகள், அவர் பாடிய தெய்வத் திருவாசகத்தின் தேனூறும் அமுதப் பாடல்களினூடே உள்ளன" (மோகன், 2013: 10).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சைவ சமயக் குரவர் நால்வருள் ஒருவர் மாணிக்கவாசகர் ஆவார். "சைவத் திருநெறித் தலைவருள் முதற்கண் உலகிற்றோன்றித் திகழ்ந்தவராகிய மாணிக்கவாசகர் ஆவார்" (சுப்பிரமணிய பிள்ளை, 2010: 490). "இவர் பாண்டிய நாட்டில் வைகையாற்றங்கரையில் உள்ள திருவாதவூரின்கண் மானமங்கலத்தில் சம்புபாத சரிதருக்கும் சிவஞானவதி அம்மையாருக்கும் மகனாக அவதரித்தார்" (சுவாமி வேதாசலம், 2003: 93). "முன்னைய மூவரும் தேவாரம் பாடியிருக்க இவர் பாடிய நூல்களாவன: திருவாசகமும், திருக்கோவையாருமாகும். திருவாசகம் எட்டாம் நூற்றாண்டில் கிடைக்கப்பெற்ற நூலாகும்" (வரதராசன், 2009: 124). "இவர் 9-ஆம் நூற்றாண்டில் வரகுண பாண்டியன் காலத்தைச் சேர்ந்தவர். இவர் பாடிய திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையில் இடம்பெறுகின்றன. இவர் சன்மார்க்கம் கொள்கையைக் கொண்டவர். மாணிக்கவாசகர் பாண்டிய மன்னனான அரிமர்த்தன பாண்டியனின் முதலமைச்சராக இருந்தவர். இவர்
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
ஞானநெறியைப் பின்பற்றியவர். இப்பூமியில் 32 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தார்" (அகளங்கன், 1994: 12-13).

"தமிழ் மொழியும் சைவசமயமும் தழைத்தினிதோங்கத் தமிழகத்தில் தோன்றியருளிய சமயகுரவர் நால்வருள் ஒருவரும், எல்லாம்வல்ல ஆண்டவனை அன்புநெறி நின்று வழிபட்டுச் சிவானந்தமாகிய இன்பக்கடலில் திளைத்துத்தம் அரிய சிவாநுபவ உண்மைகளையெல்லாம் இனிய ஞானப்பனுவல்களால் மக்கள் உய்தற்பொருட்டு வெளியிட்டருளியவர்களும் ஆகிய திருவாதவூரடிகள் அருளிச் செய்த திருவாசகம் என்னும் தெய்வத் தமிழ்மறையின் பெருமை இவ்வுலகம் அறிந்ததொன்று" (கதிரேசன், 2010: 5). திருவாசகத்தின் பெருமையை அறியாதவர் யாவரும் இல்லை என்பதனை வலியுறுத்துகின்றது. "பண்டாய நான்மறையின் இறுதிச் செய்யுளில் 'மாசில் மணியின் மணிவார்த்தை பேசி' என்ற குறிப்பால்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அடிகளியற்றிய நூல் மணிவார்த்தையாகிய மணிவாசகம் என்று கருத இடமுண்டு" (சுப்பிரமணியப் பிள்ளை, 2007 : 5).

மாணிக்கவாசகர் பாடிய திருவாசக நூல் சைவ சமயக் கடவுளான சிவன் மீது கொண்ட பக்தியில் பாடப்பட்ட பாடல்கள் ஆகும். " 'திரு' என்பது செல்வச் செருக்கால் மகிழ்ச்சி அடைதலும் வறுமைத் துயரால் வருத்தம் உறுதலும் இன்றி, எப்போதும் ஒரே மனநிலையுடன் கூடிய உள்ளத்தின் நிறைவைக் குறிக்கும். 'வாசகம்' என்பது அத்தகைய மனநிறைவுடையவரின் திருவாயிலிருந்து வெளிப்படும் ஆற்றல்மிக்க சொற்களால் அமையும் நூலைக் குறிக்கும். சிவபெருமானின் திருவருள் உள்நின்று உணர்த்த, தன்செயல் அற்றுத் தான் அற்றபின், நாதன் தன் செயலான நிலையில் விளைந்து வாக்கு, திருவாசகம் ஆகும்" (வைத்தியநாதன், 1992: 1). திருவாசகப் பாடல்கள், அவரவர்களுடைய

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தவத்திற்கும் அருள் அனுபவத்திற்கும் ஏற்ப பொருளை உணர்த்தும்.

"எட்டாந் திருமுறையாகிய திருவாசகமும் குருவரவு, குருவின் ஆளுமை, குருவின் கருணை, குருவருளின் விளைவான பேரின்பப் பேறு, குருவின் பிரிவாற்றாமை முதலாகிய விஷயங்களையே பரக்கச் செழிக்கப் போற்றித் துதிப்பதாக அமைகின்றது (கந்தையா, 1998: 90). குருவை மையமாகக் கொண்டு பாடப்பட்ட பாடல்களே திருவாசகம் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

சைவசித்தாந்த அடிப்படையில் அமையும் சைவ சாத்திர நூலான திருவருட்பயனில் கூறப்பட்டுள்ள பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களில் ஒன்றான பசு இயல்பு சைவ சமயத் தோத்திர நூலான திருவாசகத்தில், கூறப்பட்டுள்ளனதா என்பதை ஆராய்வதாக இந்த ஆய்வு அமைந்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.2 ஆய்வுப் பின்னணி

உலகில் நிலவி வரும் சமயங்கள் பல. அவற்றுள் மிக்க பழமை உடைய ஒன்றாகத் திகழ்வது, சைவ சமயம். “ ‘சைவம்’ என்பதை விளக்கும் திருமூலர் ‘சைவம் சிவனுடன் சம்பந்தமாவது’ ” என்பர் (அருணாசலம், 2002: 7). இதனையே “சிவம் செம்மையானது. சைவம் சிவமானது. சைவம் என்பது சிவனையே முழுமுதற் கடவுளாகக் கொண்ட மதத்தினைக்குறிக்கும்” (கனகசபாபதி, 1996: 154) என்ற கருத்தும் வெளிப்பட்டுள்ளதைக் காணலாம். சைவத்தின்பால் இருப்பவர்கள் சிவ அடியவர்களாக இருப்பர் என்பது கருத்து.

உலகின் எத்திசையிலும் பாயும் எல்லா ஆறுகளும் இறுதியில் கடல் ஒன்றிலே கலத்தல் போலவே அனைத்துச் சமயங்களும் ‘சைவம்’ எனும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பெருங்கடலுள் கலக்கும். இதனை ஜீ.யு. போப், “ The Saiva Siddhanta is the most elaborate, influential and undoubtedly the most intrinsically valuable of all religions of India” என்று கூறுவார். (ஶ்ரீநிவாசாசாரியன், 1942: 4). ‘சைவம்’ எனும் நூல் பெரும் கடலுக்குச் சமமாகக் கருதப்படுவதை இதன் வழி அறிந்து கொள்ளலாம். அதனுள் அடங்கி உள்ள விஷயங்கள் ‘கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு’ என்பதற்கு ஒப்பாகும்.

“சைவ சமயத்தின் முடிந்த முடிபான கொள்கை சைவ சித்தாந்தம் என்று கூறப்படுவது சர்ச்சைக்குரிய ஒன்றாகக் கருதப்படுகிறது. சைவம் சிவனோடு தொடர்புடையது. சைவ சமயத்தின் தத்துவக்கொள்கை சைவசித்தாந்தம் எனப்படும். சித்தாந்தம் எனும் சொல் சித்தத்தின் அந்தம் என்று பிரித்துப் பொருள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கொள்ளப்படும்போது உள்ளத்தினால் எடுக்கப்படும் முடிவு என்று விளங்கிக் கொள்ளப்படுகிறது. ஆனால் அது முடிந்த முடிபல்ல. திருமூலர் சைவ சித்தாந்தத்திற்குத் தரும் விளக்கம் இந்த இடத்திற் கருத்திற் கொள்ளப்பட வேண்டியது. ' சைவசித்தம் தெரிவித்த அந்தம்' என்று திருமூலர் விளக்கந் தருகிறார். இந்த வகையிற் திருமந்திரப் பாடல் (1513) தரும் விளக்கம் முக்கியத்துவம் பெறுகிறது.

சைவம் சிவனுடன் சம்பந்த மாகுதல்
சைவம் தனையறிந்தே சாருதல்
சைவம் சிவம் தன்னைச் சாராமல் நீங்குதல்
சைவம் சிவானந்தம் சாயுச்சியமே

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இப்பாடலில் 'சிவம்', 'உயிர்' என்ற இருபொருட் கலப்பு 'சைவம்' எனப்படுகின்றது. சிவம் அறியும் முறை, சைவம் அடையும் முறை. அதிலும் சிவத்தை அறிந்த பின்னர் அடையும் முறையே சைவம்". (கிருஷ்ணவேணி, 2008: 7).

சைவசித்தாந்தம் எவ்வாறு தோன்றியது என்ற வரலாற்றை எடுத்துக் கொண்டால் அதனை அடுக்கிக் கொண்டே போகலாம். சைவசித்தாந்தம் தோன்றியதற்கான ஆதாரங்கள் பல அவற்றுள் ஒன்றே "சைவ சமயம் பழங்காலந் தொட்டே வளர்ந்து வந்துள்ளது. சிந்து சமவெளியில் அமைந்திருந்த மொஹஞ்சதாரோ, ஹரப்பா நகரங்களைப் புதைபொருள் ஆராய்ச்சியில் உட்படுத்தியபொழுது அங்கு வாழ்ந்திருந்த மக்கள் சிவனையும் சக்தியையும் வழிபட்டமையினை அறியமுடிகிறது. இதனை வலியுறுத்துகின்ற வகையில், அருவுரு ஆகிய இலிங்க வடிவங்களும் விலங்கு தலை கொண்ட நரவடிவங்களும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கிடைத்தனவாம் - மேலும் சில நாணயங்களில் முத்தலை, எருது, நந்தி உருவங்கள் கிடைத்தன' " (இராமச்சந்திரன், 1962: 30) என்னும் ஆய்வாளர் கூற்று அமைகிறது. "தொல்காப்பியர் காலம் முதல் சமயச் சிந்தனைகள் வளர்ந்து வந்திருக்கின்றன. "எனினும் 'சைவசித்தாந்தம்' என்ற சொல் முதன் முதல் திருமந்திரத்தில் தான் காணப்படுகிறது" (குமரகுருபரன் பிள்ளை, 1968: 2394).

"சைவ சித்தாந்தக் கருத்துகளைத் தொல்காப்பியம், முதலிய சங்க நூல்களிலும் காணலாம். தமிழர் மறையாகிய திருக்குறள் பலவற்றை விளக்குகிறது. நம்பியாண்டார் நம்பி திருமுறைகளை வகுத்த இன்னாரும் பல சிவனடியார்களும் மறைஞானிகளும் இருந்தனர். தாயுமானவர், அருணகிரிநாதர், இராமலிங்க சுவாமிகள், யாழ்ப்பாண யோக சுவாமிகள் ஆகியோரை விசேடமாகக் குறிப்பிடலாம். கச்சியப்பர் இயற்றிய கந்த புராணம் சைவ சித்தாந்தக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கருத்துக்களின் களஞ்சியமாகும் சைவ சித்தாந்தப் புலவர், மரபொன்று ஈழநாட்டில் நெடுங்காலம் இருந்து வந்தது" (சங்கரப்பிள்ளை, 1985: 12) இவ்வாறு சைவசித்தாந்தம் பன்னெடுங்காலமாகத் தமிழ் இலக்கியங்களில் வழங்கி வருவதை அறிய முடிகிறது.

"பதி, பசு, பாசம் என்னும் திரிபதார்த்தங்களின் நிச்சயமே சித்தாந்தமாகும். மூன்றும் அநாதியாயுள்ளன. என்றும் உள்ளது, பேரறிவுடையதும், ஆனந்த சொரூபமுடையதும் பதியாகும். பசு, பதியைப்போன்று அநாதியாயுள்ளதும் அறிவுடைய பொருளுமாயினும் கன்மம், மாயையினாற் கட்டுப்பட்டதாகும். பாசம் அனாதியாயுள்ளதாயினும் அறிவில்லாச் சடப்பொருளாகும். இவ்வுண்மைகளைக் கூறும் நூல்களே சித்தாந்த சாத்திரமாகும்" (இளையதம்பி, 1978: 20). முப்பொருளின் உண்மையை விளக்கும் மிகச் சிறந்த நூல்களைச் சித்தாந்த சாத்திர

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


நூல்கள் எனலாம். சித்தாந்த சாத்திர நூல்கள் முப்பொருளின் உண்மையை வெவ்வேறாக விளக்கினாலும் அவற்றுள் பேசப்படும் கருத்து ஒன்றே ஆகும்.

14 சாத்திர நூல்களுள் திருவருட்பயனும் அடங்கும். “இது குறள் வெண்பாக்களால் ஆனது; பத்து அதிகாரங்களை உடையது. ஒவ்வோர் அதிகாரத்துக்கும் பத்துக் குறள்கள் உண்டு. இறைவனது இயல்பு கூறும் முதல் அதிகாரம் பதிமுது நிலை என்னும் பெயருடையது. ஏனைய அதிகாரங்களின் பெயர்களும் இவ்வாறே அவை கூறும் பொருளின் இயல்பை விளக்குந் தன்மையன. அவை உயிரவை நிலை, இருள்மல நிலை, அருளது நிலை, அருளுரு நிலை, அறியும் நெறி, உயிர் விளக்கம், இன்புறு நிலை, ஐந்தெழுத்தருள் நிலை, அணைந்தோர் தன்மை என்பன” (கொழும்பு விவேகாநந்த சபையினார், 1978: 32).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வினா வெண்பா, “பதின்மூன்று வெண்பாக்களைக் கொண்டது இந்நூலில், சைவசித்தாந்தக் கொள்கைகளைப் புரிந்து கொள்வதில் ஏற்படும் சிக்கல்கள் சிலவற்றை இந்நூலில் வினாக்களாகத் தொடுத்து விளக்குகின்றார் உமாபதிசிவம். அருணந்திசிவம் அருளிச் செய்த ‘இருபா இருபஃது’ என்னும் நூலோடு இந்நூலை ஒப்பிட்டுக் கூறலாம்” (வைத்தியநாதன், 1992: 45).

சைவ சாத்திர நூல்கள் பதினான்கு என்றால், சைவ தோத்திர நூல்கள் மொத்தம் பன்னிரெண்டு ஆகும். சைவ சமயத்தின் தோத்திர நூல்களுள் திருவாசகமும் ஒன்று. திருவாசகம் மாணிக்கவாசகப் பெருமான் சிவனைப் புகழ்ந்து பாடிய நூலாகும். இஃது எட்டாம் திருமுறையாகும். “மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகம் சிவஸ் துதியும் தத்துவ ஞான விளக்கமும் இணைந்த நிலையிலுள்ளது. இது 658 திருப்பாடல்களைக் கொண்ட ஐம்பத்தொரு பதிகங்களாகவுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


திருவாசகத் திருப்பாடல்கள் சிவன் கருணையைக் கற்போருள்ளுறுத்தி உரோமஞ் சிலிர்க்கச் செய்வன. உரைப்போர் கேட்போர் எனும் இருதிறத்தாரையும் உருக்கும் பான்மையன. சைவர்களுக்கு இந்நூல் பெருமகிமைக்குரிய உடைமையாக இருந்து வருகிறது. திருவாசகத்துடன் பூமியில் வாழக்கிடைக்கும் வாழ்வின்பம் அஃதில்லாமற் சுவர்க்கத்திற் பெறும் இன்பத்தைவிட அதிக அளவுக்கு மேலானதாம்" (கந்தையா, 1997: 29-30). தோத்திர நூல்களுள் ஒன்றான திருவாசகம் எப்பெருமைக்குரியது என்பது அப்பாடல் வரிகள் மூலம் அறிந்து கொள்ளலாம். அற்புதத் தன்மை திருவாசகத்தில் அமைந்துள்ளது என்று கூறுவதில் எந்த ஓர் ஆச்சரியமும் இல்லை.

'திருவாசகத்தில் பசுக் கோட்பாடு' என்ற இந்த ஆய்வுக்குச் சைவசித்தாந்த மெய்கண்ட சாத்திரங்கள் 14-இல் ஒன்றான திருவருட்பயன் எனப்படும் சாத்திரம் மட்டும் உட்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திருவருட்பயனில் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களின் உண்மை விளக்கம் விளக்கப்பெற்றுள்ளது. " திருவருளைப் பற்றியும், அதன் பயனைப் பற்றியும் விளக்கமாகக் கூறலின் திருவருட்பயன் எனப் பெயர் பெற்றது. 100 குறட்பாக்களைக் கொண்ட இந்நூல் பத்து அதிகாரங்களைக் கொண்டது. குறள் வெண்பாக்கள் என்னும் யாப்பினைக் கொண்டது. முதல் மூன்று அதிகாரங்கள் பதி, பசு, பாசம் இயல்புகளைக் கூறுவன" (இரவி, 2004: 26).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆகவே, திருவருட்பயனில் கூறப்பட்டுள்ள பதி, பசு, பாசம் எனப்படும் முப்பொருள்களில் 'பசு' எனப்படும் கோட்பாடு மட்டுமே இவ்வாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மாணிக்கவாசகர் பாடல்களில் பசுக் கோட்பாட்டைக் கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.3 ஆய்வுச் சிக்கல்

சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் என்ற மூன்று உண்மைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். இறைவனைப் பதி என்றும், உயிரைப் பசு என்றும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களைப் பாசம் என்றும் குறிப்பிடுவது வழக்கம். சைவ சமய இலக்கியங்கள், சைவ சமயத்தின் தன்மைகளை விளக்குவன ஆகும். "சைவ இலக்கியங்கள் எனப்படுவன சைவ சாத்திரங்களும் தோத்திரங்களும் ஆகும். சைவ சாத்திரங்கள் 14 மற்றும் சைவ தோத்திரங்கள் 12 ஆகும்" (முருகவேள் 1984: 5). "சாத்திர நூல்கள் பதினான்கும் திருமுறைகள் பன்னிரண்டும் சைவ சித்தாந்தத்தை விளக்குவனவாய் உள்ளன" (திருநாவுக்கரசு 1967: 10). பதினான்கு சாத்திரங்களிலும் பன்னிரு தோத்திரங்களிலும் இந்தப் பதி, பசு, பாசம் குறித்த செய்திகள்தான் பேசப்படுகின்றன என்பதை இதன் வழி அறிந்து கொள்ள

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

முடிகின்றது.

ஆயினும், பதி, பசு, பாசம் குறித்த செய்திகள் எந்தெந்த இடங்களில் தென்படுகின்றன என்ற நுண்ணிய முறை ஆய்வு இதுவரை யெவராலும் மேற்கொள்ளபடவில்லை. மேலும் மாணிக்கவாசகர் ஞானநெறிக் கொள்கையுடையவர் ஆவார். இந்த ஞானநெறிப் பார்வையைக் கொண்ட இவருடைய பாடல்களில் பசுவைப் பற்றிய எண்ணங்கள், கருத்துகள் மாறுபட்டிருக்க வாய்ப்பு உண்டு. இதுவே இந்த ஆய்வின் சிக்கல் ஆகும். மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்தில் பசு இயல்புகள் எந்தெந்த இடத்தில் இடம்பெற்றுள்ளன? பசு பற்றிய சிந்தனை சைவசித்தாந்தத்தோடு பொருந்துகிறதா? என்று ஆராய்வதே இந்த ஆய்வின் மையம் ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi